12
125
DSW
DIRECTOR OF SOCIAL WELFARE
25 JUL 2013
CHINTADRIPET, CHENNAI-2
JUL 2013

(33381

<u>சுருக்கம்</u>

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை – முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் (பழைய மற்றும் புதிய) கீழ் பதிவு செய்யப்பட்ட பெண் குழந்தைகளின் வைப்புத் தொகைக்கான முதிர்வுத் தொகையினை அவர்களது உயர் கல்விக்கு பயனளிக்கும் வகையில் அவர்களுக்கு 18 வயது பூர்த்தி அடைந்தவுடன் வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட (சந.5)த் துறை

அரசாணை (நிலை) எண்.61

நாள் 05.07.2013
விஜய, ஆனி 21,
திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.533, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 13.10.1992.
2. அரசாணை (நிலை) எண்.166, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 14.05.1997.
3. அரசு கடித எண்.21675/சந–5/1997–2, நாள் 14.11.1997.
4. அரசாணை (நிலை) எண்.199, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 31.12.2001.
5. அரசாணை (நிலை) எண்.67, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 14.09.2011

மேலும் படிக்க:

6. சமூக நல இயக்குநரின் கடித ந.க.எண்.14519/குந.3/ 2013, நாள் 29–04–2013.

-----

<u>ஆணை:</u>

17–04–2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110ன் கீழ் ஏனையவற்றுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பின்வருமாறு அறிவிப்பு செய்யப்பட்டது:-

....."பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள பயனாளிகளின் வைப்புத் தொகைக்கான முதிர்வுத் தொகை அவர்கள் 20 வயது பூர்த்தி அடைந்தவுடன் வழங்கப்பட்டு வந்தது. இக்குழந்தைகளின் உயர் கல்விக்கு பயனளிக்கும் வகையில், இந்த முதிர்வுத் தொகை இனிமேல் 18 வயது பூர்த்தி அடைந்தவுடன் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால், நடப்பு நிதி ஆண்டில் 30,000 பெண்கள் பயனடைவர்".

2. மேற்காணும் அறிவிப்பு தொடர்பாக, சமூக நல இயக்குநர் அரசுக்கு அனுப்பிய தமது கருத்துருவில் முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் என்று தற்போது அழைக்கப்படும் இத்திட்டம், பெண் குழந்தைகளின் கல்வியினை ஊக்குவிக்கும் பொருட்டும், பெண் சிசுக் கொலையினை ஒழித்திடவும், ஆண் குழந்தைகளை விரும்பி ஏற்கும் நிலையினை மாற்றிடும் நோக்கத்துடன், வறுமையில் வாடும் குடும்பங்களில் உள்ள பெண் குழந்தைகள் பயன்பெறும் வகையில் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி 1992ஆம் ஆண்டு முதன் முதலாக "புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்" என துவக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார். மேற்காணும் அரசாணையின்படி பதிவு செய்யப்பட்ட குழந்தைகளுக்கு பின்வருமாறு காலமுறைப்படி நிதியுதவி வழங்கிட ஆணை வெளியிடப்பட்டுள்ளது:-

| | | |
|---|---|---|
| i) | குழந்தையின் முதல் பிறந்த நாளின் போது | ரூ.250/– |
| ii) | பள்ளியில் சேர்க்கப்படும் போது | ரூ.250/– |
| iii) | 6ஆம் வகுப்பு சேர்க்கப்படும் போது | ரூ.500/– |
| iv) | 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை 4 ஆண்டுகள், மாதம் ரூ.50/– வீதம் ஓராண்டில் 10 மாதங்களுக்கு | ரூ.2000/–<br>(நான்கு ஆண்டுகளில்) |
| v) | 20 ஆண்டுகள் முடிவுற்ற பின்னர் பெண்ணின் திருமணத்திற்கு அல்லது உயர்கல்விக்கு. | ரூ.10000/–<br>(ஒட்டு மொத்த தொகை) |

3. மேலும், பெண் குழந்தைகளுக்கு அதிக நிதிப்பயன் கிடைத்திடும் வகையில் 1997–98ஆம் ஆண்டு மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி இத்திட்டம் மறுவடிவாக்கம் செய்யப்பட்டது. அதன்படி 1992–93லிருந்து 1996–97 வரை பதிவான அனைத்து குழந்தைகளுக்கும் ரூ.1500/–க்கான ஐந்தாண்டுக் காலவரை வைப்புத் தொகை இரசீது 1997–98ல் வழங்கப்பட்டதுடன், 1997–98ஆம் ஆண்டு முதல் மாற்றியமைக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் பதிவாகும் இரண்டு பெண் குழந்தைகளில் ஒவ்வொருவருக்கும் ரூ.1,500/–ம், ஒரே ஒரு பெண் குழந்தை இருப்பின் ரூ.3,000/–ம் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் ஐந்தாண்டுக்கான காலவரை வைப்புத் தொகை இரசீது வழங்கப்படும் என்றும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் அவ்வைப்புத் தொகை ஒவ்வொரு ஐந்தாண்டிலும் புதுப்பிக்கப்பட்டு அந்த பெண் குழந்தை 20 ஆண்டுகள் நிறைவடையும் போது அந்த வைப்புத் தொகையை மேற்காணும் நிதி நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. 2001–2002ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் மறுவடிவாக்கம் செய்யப்பட்டது. அதன்படி, மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, இத்திட்டத்தின் கீழ் பயனடைய, குடும்பத்தில் ஒரே ஒரு பெண் குழந்தை

127

மட்டும் இருப்பின், அப்பெண் குழந்தையின் பெயரில் ரூ.22,200/–ம் (திட்டம்–1), குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருப்பின் ஒவ்வொரு பெண் குழந்தையின் பெயரிலும் தலா ரூ.15,200/–ம் (திட்டம்–2) தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளின் பெயரில் முதலீடு செய்யப்பட்டுள்ள வைப்பீட்டுத் தொகைக்கான முதிர்வுத் தொகை 20 ஆண்டுகள் முடிந்தவுடனும், அப்பெண் குழந்தை 10ம் வகுப்பு பொதுத் தேர்வை எழுதியிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடனும் வழங்கிடலாம் என்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. மேலும், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பெண் குழந்தைகளுக்கு அதிக உதவித் தொகை கிடைத்திடும் வகையில் 2011ஆம் ஆண்டு இத்திட்டம் முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டது. அதன்படி, மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் பெண் குழந்தைகளுக்கு உயர்த்தி வழங்கப்பட்ட வைப்பீட்டு தொகையினை பெற அக்குழந்தை 01–08–2011 அன்றோ அல்லது அதற்கு பிறகோ பிறந்திருந்தால், திட்டம்-Iன் கீழ் ஒரு பெண் குழந்தைக்கு ரூ.50,000/– ஆகவும், திட்டம்-IIன் கீழ் இரண்டு பெண் குழந்தைகள் பிறந்திருந்தால் ஒவ்வொரு குழந்தைக்கும் தலா ரூ.25,000/– ஆகவும் உயர்த்தி வழங்கிட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

6. எனவே, பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் (பழைய மற்றும் புதிய திட்டம்) கீழ் பதிவு செய்துள்ள பயனாளிகளின் வைப்புத் தொகைக்கான முதிர்வுத் தொகை அக்குழந்தைகளின் உயர் கல்விக்கு பயனளிக்கும் வகையில் அவர்கள் 20 வயது பூர்த்தியடைந்தவுடன் (20 ஆண்டு வைப்பீட்டுத் தொகை) வழங்குவதற்கு பதிலாக 18 வயது பூர்த்தி அடைந்தவுடன் வைப்பீட்டுத் தொகையின் முதிர்வுத் தொகையினை வழங்கிட உரிய ஆணை வழங்குமாறும், அவ்வாறு வழங்கும் பட்சத்தில் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 2011–2012ஆம் ஆண்டு வரை வைப்புத் தொகை இரசீதுகள் பெற்றுள்ள (பழையத் திட்டம் மற்றும் புதிய திட்டம்) பெண் குழந்தைகளில் தோராயமாக 30,000 பெண் குழந்தைகள் 2013–14ஆம் நிதியாண்டில் பயன் பெறுவார்கள் என்றும் சமூக நல இயக்குநர் அரசுக்கு தெரிவித்துள்ளார்.

7. சமூக நல இயக்குநரது கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்தபின், அதனை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி 2013–2014ஆம் ஆண்டில் சுமார் 30,000 பெண்கள் பயனடையும் வகையில் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் (பழைய மற்றும் புதிய திட்டம்) பதிவு செய்துள்ள பயனாளிகளின் வைப்புத் தொகைக்கான முதிர்வுத் தொகையினை அப்பெண் குழந்தைகள் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வை எழுதியிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, அக்குழந்தைகளின் உயர் கல்விக்கு பயனளிக்கும் வகையில் அவர்கள் 18 வயது பூர்த்தி அடைந்தவுடன் வழங்கிட ஆணையிடுகிறது.

8. பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வைப்பீடு செய்யப்பட்டுள்ள தொகைக்கான முதிர்வுத் தொகையினை பெண் குழந்தைகளின் உயர்கல்விக்கு பயனளிக்கும் வகையில் அவர்கள் 18 வயது பூர்த்தியடைந்தவுடன் பத்தாம் வகுப்பு

பொதுத்தேர்வை எழுதியிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வழங்கிட தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி சமூக நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவுடன் அதன் அலுவல் சார்பற்ற எண்.202/DS(VS)/நிதி (சந)/13, நாள் 04.07.2013–ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.மு. பஷீர் அஹமது
அரசு செயலாளர்

பெறுநர்
சமூக நல இயக்குநர், சென்னை–600 002
அனைத்து மாவட்ட ஆட்சி தலைவர்கள் (சமூக நல இயக்குநர் வழியாக)
அனைத்து மாவட்ட சமூக நல அலுவலர்கள் (சமூக நல இயக்குநர் வழியாக)
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் (சமூக நல இயக்குநர் வழியாக)
அனைத்து சம்பள கணக்கு அலுவலர்கள் (சமூக நல இயக்குநர் வழியாக)
மாநில கணக்காயர், சென்னை–600 018.
மாநில கணக்காயர், சென்னை–600 009.

<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600 009
நிதி (சந / வ.செ – I& II)த் துறை, சென்னை–600 009
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
அரசு செயலர் அவர்களின் முதுநிலை முதன்மை தனிச்செயலர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, சென்னை–600 009.
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்,
சென்னை–600 035
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், சென்னை–600 002
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந–2) துறை, சென்னை– 600 009.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்